# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
மார்கழி 12
முஹறம் 26
புதன் (27-12-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 60
விலை சதம் 35


### பொலீஸ் நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட சிங்களக் 'கவிதை'யின் தமிழாக்கம்

# "தமிழ் எனும் இனத்தை அழிக்க ஆயுதங்களைக் கையிலெடு!"

## பொறுப்போமா அல்லது அவர்களைக் கொலைசெய்து சாப்பிடுவோமா?'

தமிழர்கள் அனைவரையும் தாக்குமாறு கோரி யாழ்ப்பாணப் பொலீஸ் அதிபரின் அதிகார முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளில் சகல பொலீஸ் நிலையங்களுக்கும் அநாமதேயக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும், இது குறித்து உடனடியாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு கோரியும், ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் எழுத்து மூலமாக 21-12-78 வியாழக் கிழமை பிற்பகல் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளாரல்லவா? கவிதை போல அமைந்துள்ள அச்சிடப்பட்ட அச்சிங்களக் கடிதங்களில், ''தமிழ் என்னும் இனத்தை அழிக்க ஆயுதங்களைக் கையிலெடுக்குமாறும், பொறுப்போமா அல்லது அவர்களை (தமிழர்களை) கொலை செய்து சாப்பிடுவோமா'' என்றும் பயங்கரவாதத்தைத் தூண்டும் முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி சிங்களக் கவிதைக் கடிதத்தில் காணப்படும் வாக்கியங்களின் தமிழாக்கம் பின்வருமாறு—

''தமிழ் என்னும் இனத்தை அழிக்க ஆயுதங்களை கையிலெடு!
உன் உரிமை நிலம் எனக்கு உரிமையின்றிப் போய் விடுமா?
நாம் பழகுவதற்கு சொந்த நிலமில்லாமல் போய் விடுமா!
விழுந்த சொட்டு இரத்தம் உண்மையா? இல்லையா?
சகோதரர்களே! சிங்கள நாமத்திற்கு வெட்கம் இல்லையா?
ஒரு பக்கம் பெருங்கல் மறுபக்கம் தமிழர் வாயில்
விரசிங்கள கைமுனுவுடைய அந்த ரத்தம்
எங்களுடன் இருக்கிறபடியால் ஏன் பயப்படவேண்டும்!
மரணத்தின் பலி எனது நாட்டின் சாவின் பலி இல்லை.
ஐமிச்சத்தைத்தான் கொடுக்கிறது.
எங்கள் சகோதரன் கிங்ஸ்லி பெரேரா
எங்களை விட்டுப் பிரிந்து விட்டார்.
முப்பது குண்டுகள் நெஞ்சில் நிறைய விழுந்தபோது
நல்லூர் முழுவதும் சிந்தியது சிங்கள இரத்தம்,
பொறுப்போமா அல்லது அவர்களை
கொலை செய்து சாப்பிடுவோமா?''

## அவரும் ஒரு புலியா?

மாவத்தகம பா.உ.? 'பனம் பொருள் அபிவிருத்திச் சபை தலைவர் திரு. கே. வி. நித்தியானந்தா புலி இயக்கத்துடன் தொடர்புடையவர் என்று சொல்லப்படுகிறது!'

அமைச்சர் ஜெயவர்த்தன; புலிகளை விரட்ட சிங்கங்கள் இருக்கின்றனவே!

மாவத்தகம: பா. உ. அது புலி வாலைப்பிடித்த கதையாகி விடக்கூடாதே!

—பாராளுமன்றத்தில்

## பனையால் விழுந்தவனை மாடேறி மிதிக்கிறது!

### மட்டுநகரிலும் இராணுவ அட்டூழியம்!

"யாழ்ப்பாணத்தார் இங்கு தேவையில்லை'' என்று கூறி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வடக்கு, கிழக்கு, என்ற அற்பத்தனமான குறுகிய பிரதேச வேறுபாடுகளை வளர்த்து— அதிலேயே தமது அரசியல் வாழ்வை நிரந்தரமாக அமைத்துக் கொள்ளத் துடிக்கும் தேவநாயகமும், கனகரெத்தினமும், இவர்களது புதிய நண்பர்களும் எப்படித்தான் தமிழினத்தைக் கூறுபோட முற்பட்டாலும்— வெறிபிடித்த சிங்கள ஆயுதப்படைகளின் கண்க

—4-ம் பக்கம் பார்க்க

## "உடன் நடவடிக்கையின்றேல் பயங்கர விளைவு ஏற்படலாம்!"

### ஜனாதிபதிக்கு அமிர் அவசரக் கடிதம்



இது சம்பந்தமாக எதிர்க் கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் 21-12-78 வியாழக்கிழமை பிற்பகல் ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பியுள்ள அவசரக் கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:—

''உங்களுடன் இன்றுகாலை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியதைத் தொடர்ந்து, இக்கடிதத்தை உங்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

''நேற்று இருபதாம் திகதி புதன்கிழமை இரவு6 மணிக்கும் எட்டுமணிக்குமிடையே யாழ். நகரில் றீகல்படமாளிகைக்குமுன்பாக சிவில்உடையில் வந்த பொலிசார் அங்கு நின்றபொதுமக்களைக் காரணமின்றித் தாக்கியுள்ளனர், காயமடைந்த நால்வரில் படுகாயமடைந்த ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

''வடக்கில் வாழும் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்துமாறு கோரி வடபகுதியிலுள்ள சகலபொலிஸ் நிலையங்களுக்கும் சிங்களத்தில் கடிதங்கள் அனுப்பபட்டுள்ளன. இக்கடிதங்கள் யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்திலிருந்தே அனுப்பப்பட்டதாகக் கருதும்படி கடிதங்களின்கீழ் யாழ். பொலிஸ் அதிபரின் றபர் முத்திரை (றபர்ஸ்டாம்ப்) குத்தப்பட்டுள்ளது. இவ்விதமான ஒரு செயலுக்காக நான் யாழ். பொலிஸ் அதிபர்மீது சந்தேகம் கொள்ளவில்லை. இவரது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் யாரோ ஒருவர் யாழ் பொலிஸ் அதிபரின் அலுவலக றபர் முத்திரையை உபயோகித்து இக்கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

''யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச்சென்ற சாரதிகள் இராணுவத்தினரால் மாங்குளம், ஓமந்தை, வவுனியா, ஆகிய இடங்களில் தாக்கப்பட்டுள்ளனர்.

''மயிலிட்டியைச் சேர்ந்த வர்த்தகர் திரு. என். சிவஞானரத்தினம் எனக்குத்

—4-ம் பக்கம் பார்க்க

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களைத் தாக்கும் பயங்கரவாதிகள்

# சிங்கள அரசின் ஆயுதபடைகளே

## வல்வையில் நிகழ்ந்த கொடுமைகளின் பட்டியல்!

**வ**ல்வெட்டித்துறைப் பகுதிகளில் பொதுமக்கள் சுதந்திரமாக நடமாட முடியாத அளவிற்கு பொலிசாரும் இராணுவத்தினரும் கூட்டாக சேர்ந்து காட்டுமிராண்டித்தனம் நடாத்தி வருகின்றனர்.

காலத்திற்குக் காலம் இவர்கள் தலைமறைவாகத் திரியும் இளைஞர்களைத் தேடுகின்றோம் என்ற சாட்டில் சாதாரண அப்பாவிப் பொதுமக்களை இம்சைப்படுத்துவதில் ஈடுபட்டு வருகின்றனர். சிறிது காலம் ஓய்ந்திருந்த இவர்களது தேடுதல் வேட்டை சமீபத்தில் இடம் பெற்ற திருநெல்வேலி மக்கள் வங்கிக் கொள்ளையினைத்தொடர்ந்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை (13-12-78) தொண்டைமானாற்றில் வைத்து இனந்தெரியாத நபர்களால் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதனைத் தொடர்ந்து தொண்டைமானாறு வல்வெட்டித்துறைப் பகுதிகளில் இவர்களது வெறியாட்டங்கள் அத்துமீறத் தொடங்கியுள்ளன.

15-12.78 வெள்ளியன்று மாலை 6 மணி தொடக்கம் வீதிகளில் தமது அன்றாட அலுவல்களைக் கவனிப்பதற்காக நடமாடித்திரிந்த பலர் தாக்கப்பட்டுள்ளனர். வல்வையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளரும் இவர்களது தாக்குதலுக்கு ஆளாகியுள்ளார். தாக்கப்பட்ட சிலர் கோவிற் குளமொன்றிலும் தூக்கி வீசப்பட்டுள்ளனர். பொலிசாரும், இராணுவத்தினரும் பொதுமக்களைத் தாக்கிய சமயம் ''குட்டி மணி'யைத் தெரியுமா?'' என்றுகேட்டே அடித்துள்ளார்களாம்.

வெள்ளியன்று இடம் பெற்ற வெறியாட்டத்தின் போது ஆலடியில் கடை வைத்திருப்பவரும், குட்டி மணி என்பவரின் சகோதரருமான செ. யோகராசா என்ற இளைஞர் 'றஞ்சனு' தியேட்டரில் படம் பார்த்துவிட்டு வந்த சமயம் இராணுவத்தினரால் பலமாகத் தாக்கப்பட்டுள்ளார். தெருவீதியால் சைக்கிளில் வந்து கொண்டிருந்த இவரை ஜீப் வாகனத்தில் வந்த இராணுவத்தினர் வழி மறித்து ''அடே நீ குட்டி மணியின் தம்பியா?'' என்று கேட்டு சப்பாத்துக் கால்களினலும், கைகளினலும், துவக்குப்பிடியாலும் பலமாகத் தாக்கியுள்ளனர். அவர் கொண்டுவந்த சைக்கிள் அடித்து நொருக்கப்பட்டுள்ளது. வீதியில் அவரை அடித்து வீசிவிட்டு ஜீப் வண்டியினுல் மோதுவதற்கும், தந்திக்கம்பத்தினை கட்டிப்பிடிக்க வைத்துவிட்டு சுட்டுக் கொல்வதற்கும் இராணுவத்தினர் முயன்றுள்ளார்கள்.

இந்த இளைஞர் இதுவரை 18 தடவைகள் பொலிசாரினுல் தாக்கப்பட்டுள்ளார். அடிக்கடி இவரது வீட்டுக்குள் நுழைகின்ற பொலிசார் சட்டி பானைகள் உட்பட வீட்டுத்தளபாடங்களை அடித்து நொருக்குவதோடு இவரை மட்டுமன்றி, இவரின் வயோதிபத் தாயாரையும் துன்புறுத்துகின்ருர்களாம்.

### 18-12-78 தாக்குதல்

15-12-78 வெள்ளிக்கிழமை நிகழ்ந்த வெறியாட்டத்தினுல் அல்லோல கல்லோலப்பட்ட மக்கள் தங்களை ஆறுதல்படுத்திக் கொண்டிருந்தவேளை மீண்டும் மின்னுமல் முழங்காமல் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். திட்டமிடப்பட்ட இந்தத் திடீர்த்தாக்குதலினுல் வல்வையில் ஐந்து லட்சம்ரூபாய்க்குமேல் நஷ்டமேற்பட்டுள்ளது. சில வீடுகள், பல கடைகள் தீயிடப்பட்டுள்ளன. பல்லாயிரக் கணக்கான ரூபாய்கள் பெறுமதியான ஆடையணிகள், மீன்பிடி உபகரணங்கள் களவாடப்பட்டுள்ளன.

### வேலி பயிரைமேய்ந்த கதை!

''தமிழர்களை யாரும் துன்புறுத்த அனுமதியோம் என அரசியல் மகாநாட்டிலும், ''சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட பொதுமக்கள் ஒத்துழைக்கவேண்டும்'' என தேசிய அரசுப் பேரவையிலும் ஆட்சியாளர்கள் உரையாற்றுகின்ற அதேவேளையில், சட்டத்தினையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டிய— சட்டத்தின் காவலர்கள் என்று சொல்லப்படுபவர்களே தங்களது காடைத்தனங்களைக் கட்டவிழ்த்து விடுவதைக் காணும்போது மீண்டும் ஒரு இனக்கலவரத்துக்கு வித்திடப்படுகிறதா? என்ற கேள்விக்குறி பொதுமக்கள் மனதில் ஏற்படுகின்றது.

18-12-78 திங்கள் மாலை 6.30மணி தொடக்கம்இரவு 10மணிவரை சிங்கள ஆட்சியாளர்களின் ஏவலாளர்கள் நடந்துகொண்ட விதம் இச்சந்தேகத்தைத்தான் ஏற்படுத்துகின்றது.

### ஆலடிப்பகுதியில் றிவால்வரோடு இராணுவத்தினர்

சுமார் 6-15 மணியிருக்கும். ஆலடியில் வழமை போல் மீன்வியாபாரம் ஆரம்பிக்கின்ற நேரம் திடீரென்று ஒரு பதட்ட நிலை மீன் விற்க வந்தவர்கள்— வாங்கவந்தவர்கள்— தெருவில் நின்றவர்கள் அனைவருமே அவ்விடத்தைவிட்டு அவசர அவசரமாகஅகன்று சென்ருர்கள். ஒருசில இராணுவத்தினர் கையில் றிவால்வரோடு அப்பகுதியில் நடமாடியதே பொதுமக்களின் பதட்டநிலைக்கு முக்கிய காரணமாகும். ஒரு சில நிமிடநேர இடைவெளிக்குள் மக்கள் பதறியடித்துக் கொண்டு மேற்குப்புறத்திலிருந்து சந்தியை நோக்கி ஓடிச்சென்றனர்.

### சந்திக்கடைகள் தீக்கிரை

[illegible]

யாரையோ சுட்டுவிட்டதாக கூக்குரல் வைத்துக் கொண்டே அவர்கள் ஓடினுர்கள். சந்தியில் செய்தி பரவியதும் கடைகள் அடித்துப் பூட்டப்பட்டன. சனசமூக சேவாநிலையம் மூடப்பட்டது. சில நிமிடநேரங்களுக்கு சந்தி வெறிச்சோடிப்போய்க் கிடந்தது. சிறிதுநேரத்தில் 'ட்ரக்' வண்டி வந்துநின்றசப்தம். தொடர்ந்து ஆகாயத்தில் வெடிச்சத்தங்கள் வீடுகள் தீக்கிரை. கடைகள் சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. கடைகளினுள்ளே இருந்தவர்கள் வெளியே இழுத்தெடுக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டனர். எங்கும் புகைமயம். நெருப்பு வானளாவ பற்றியெரியத் தொடங்கியது. வீடுகளில் மக்கள் என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தனர்,

### தீக்கிரையான கடைகள்

கணபதிவிலாஸ் ஜவுளிக் கடை சூறையாடப்பட்ட பின் தீமூட்டப்பட்டதில் கடைபூராவும் எரிந்துசாம்பராகிவிட்டது. மாணிக்கம் சோதிலிங்கம் என்பவருக்குச் சொந்தமான கடைக்கு ஏற்பட்ட மொத்த நஷ்டம் 50,000 ரூபாய் வரைஎன்று கணக்கிடப்பட்டுள்ளது.

சீநோர் வலைக்கடையில் வலைகளும் மீன்பிடி உபகரணங்களுமாக சுமார் 50,000 ரூபா பெறுமதியான பொருட்கள் இருந்துள்ளன. கடைக்கட்டிடம், பொருட்கள் யாவும் எரிந்து சாம்பராகிவிட்டன. இங்கும் பொருட்கள் சூறையாடப்பட்டிருக்கலாமென நம்பப்படுகிறது.

ஜெயா சலவைத்தொழிற்சாலை தீமூட்டப்பட்டதில் கடைக் கட்டிடம், துணி வகைகள் யாவும் எரிந்து சாம்பராகிஉள்ளது. கடைத் தொழிலாளி இராணுவத்தினரால் அடித்து விரட்டப்பட்டுள்ளார்.

ஆ. நா. வேலாயுதம் என்ற சட்டத்தரணி ஒருவரின் அலுவலகமும் தீயிடப்பட்டு பொருட்கள், கட்டிடம்யாவும் எரிந்து சாம்பராகிவிட்டது.

தையற்கடை ஒன்று அடித்துநொருக்கப்பட்டுள்ளது. அங்கு இருந்த பெறுமதி வாய்ந்த வானெலிப்பெட்டி போன்ற பொருட்களுக்கு நூருக உடைக்கப்பட்டுள்ளது.

### வீடுகள் தீக்கிரை

சந்தி ஒழுங்கையில் இருந்த ஆ. சுபத்திரை ஏழை விதவைப்பெண்ணின் வீடும் கிழக்குத்தெருவில் அமைந்துள்ள வீடொன்றும் தீயிடப்பட்டுள்ளது. சுபத்திரையின் வீடு முற்றுக எரிந்து சாம்பராகிஉள்ளது. அலுமாரி ஒன்று பாதி எரிந்தநிலையில் மீட்கப்பட்டுள்ளது. தங்க ஆபரணங்கள் ஆடைஅணிகள் காணுமற்போயுள்ளன. இவற்றின் பெறுமதி 3000 ரூபாவரையில் இருக்கலாமென மதிப்பிடப்பட்டுள்ளது.

### அடித்து நொருக்கப்பட்ட கடைகள்

கடைத்தெருவிலுள்ள கடைகள் அனைத்திலுமே கொள்ளையடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செல்வச்சந்நிதி ஸ்ரோர்ஸில் புகுந்த இராணுவக் காடையர்கள் கந்தையா தில்லையம்பலம், சோமசுந்தரம் விஞயகமூர்த்தி சித்திரவேலு சிவபாதலிங்கம் ஆகியோரை பலவந்தமாக வாகனத்தில் ஏற்றிச் சென்று தங்களது கைவரிசையைக் காட்டியுள்ளனர். அதுமட்டுமன்றி ரொக்கமாக இருந்த 2400 ரூபா வரையிலான தொகையையும் களவெடுத்துச் சென்றுள்ளனர்.

சண்முகபு என்பவரது ரொட்டிக்கடையும் அடித்து நொருக்கபபட்டுள்ளது. கடையில் இருந்த அவரை முதல்தடவை இராணுவம் பொலிஸ் இரு பிரிவினரும் சேர்ந்து தாக்கியுள்ளனர். பின்பு தனியாகவந்து இராணுவத்தினரும் தாக்கியுள்ளனர். தாக்கிய பொலிசாரில் முன்னணியில் நின்ற ஒருவரை — 'அந்த' தமிழ்ப் பொலிஸ்காரரை தன்னுல் அடையாளம் காட்ட முடியுமென சண்முகம் கூறியுள்ளார். தனது கணவன் தாக்கப்படுவதைச் சகிக்க முடியாத சண்முகத்தின் மனைவி, கடைக்கு எதிர்ப்புறமாக உள்ள வீட்டிலிருந்து வெளியில் வந்த சமயம் அவளும் பலமாகத் தாக்கப்பட்டுள்ளார்.

மப்புக் கோஷ்டியின் தாக்குதலினுல் காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில், கு. தில்லையம்பலம், சி. தங்கராசா, வினுயகமூர்த்தி, க.

—3-ம் பக்கம் பார்க்க

### வேண்டுகோள்

மட்டக்களப்புப் பகுதியில் வெள்ளத்தினுல் அழிக்கப்பட்டுள்ள பயிர்செய் நிலங்களில் புனர் நடுகை செய்வதற்கு விதைகள், வாழைக் குட்டிகள், மரவள்ளிக் கட்டைகள் தேவையாக இருக்கின்றன. இவற்றை இலவசமாகக் கொடுத்துதவ விரும்புபவர்கள் யாழ்ப்பாணம் ''மில்க் வைற்'' தாபனத்தாரோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்ருர்கள்.

வாசித்து விட்டீர்களா?
ஈழத்து இலக்கிய சஞ்சிகைகளில் அரிய பொக்கிஷம்

சுடர்
CHUDAR

(மார்கழி இதழ்)
இப்போது எங்கும் விற்பனையாகிறது

இவ்விதழில்
தலைவியின் துயரம் (இலக்கியக் கட்டுரை) —முல்லை மணி
பலியாடு (சிறு கதை) —துவீபன்
புறநானூற்று இன்பம் (இலக்கியக் கட்டுரை) —கலா மோகன்
உணர்ச்சிக் கவிஞரும் ஈழக்கலம்பகமும் —ச. ஸ்ரீகாந்தா
இம் மாத பரிசுக் கதை —செ. குணரத்தினம்

மற்றும் பல
★ கவிதைகள்,
★ கட்டுரைகள்,
★ சிறுகதைகள்,
★ துணுக்குகள்:
★ சுடர் வட்டம்
அரிய பல் சுவைகளுடன் வெளிவந்திருக்கிறது.
வாசிக்கத் தவருதீர்கள்
விலை ரூபா. 1.00 மட்டுமே

தமிழ் ஈழம் நாடகாட்டி
தமிழர் விடுதலைக் கூட்டணி
பா. உ க்களின்
படங்களைத் தாங்கிய
அட்டையுடன்
விலை ரூபா 8-60
கிடைக்கும் இடம்:
க. சண்முகநாதன் (மணி)
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி சொல்வோம் சிறில் மத்தியூவுக்கு!

பாராளுமன்றத்தில் 19.12.78 செவ்வாயன்று இரவு ஒத்திவைப்புப் பிரேரணை மீது பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணிப் பா. உக்கள் தமிழ் ஈழத்தில் பொலிசாரும் ஆயுதப்படையினரும் மேற்கொண்டுவரும் பயங்கரவாத நடவடிக்கைகளை கண்டித்தும் ஆயுதப்படையினரின் பயங்கரவாதத்தினுல் தமிழ்மக்கள் தக்கப்படுவதையும், கடைகள், வீடுகள் தீக்கரையாக்கப்படுவதையும் பொதுமக்களின் பணம் ஆயுதப் படைகளினுல் கொள்ளையடிக்கப்படுவதையும், இதனுல் மக்கள் பீதியுடனும் அச்சத்துடனும் பாதுகாப்பின்றியும் வாழவேண்டியநிலையேற்பட்டுள்ளதையும் ஆயுதப்படைகளின் பயங்கரவாதம் தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்றும் வற்புறுத்திப் பேசினர்.

த. வி. கூட்டணியினரை அடுத்து பேசிய கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. சிறில்மத்தியூ 'அஹிம்சை' பேசும் 'அப்பாவி'க் கூட்டணியினருக்கு புத்திபுகட்டும் வகையில், ஓர் அருமையான அரசியல் அறிவுரையைக் கூறியிருக்கிறுர்;

அதாவது—பயங்கரவாதத்தை பயங்கரவாதத்தின் மூலம்தான் முறியடிக்க முடியும் என்று அவர் அடித்துக் கூறியிருக்கிருர்.

அப்போது குறுக்கிட்ட நல்லூர் சிவா, சிறில் மத்தியூவைப்பார்த்து ''நன்றி; நீங்கள் உங்கள் நிலையைத் தெளிவுபடுத்தி விட்டீர்கள்; இப்போதுதான் எமக்கு உங்களின் நிலை நன்ருகப் புரிந்துள்ளது'' என்ருர்.

வடபகுதியில் பயங்கரவாதம், பயங்கரவாதம் என்று சத்தமிடும் சிறில் மத்தியூவும், அவரது அரசாங்கமும் எப்படிப்பட்டது என்பதையும் தமிழ்மக்கள் ஒரு கணம் எண்ணிப் பார்ப்பது நல்லது—

1971ம் ஆண்டு சிங்களநாடு முழுவதும் பயங்கரவாதம் தலை தூக்கியது; பொலீஸ் நிலையங்கள் தகர்க்கப்பட்டன; அங்கிருந்து துப்பாக்கிகள் கொள்ளையிடப்பட்டன; ஆயிரக்கணக்கான பொலிசாரும், ஆயுதப்படையினரும் படுகொலை செய்யப்பட்டனர்; சிங்களநாடு முழுவதும் பயங்கரநிலை நிலவியது; 'மாகோ' போன்ற சிலபிரதேசங்களை பயங்கரவாதிகளே கைப்பற்றி ஆட்சிநடத்தினர்.

நாட்டின் பிரதமரைக் கடத்திச் சென்று கொலை செய்யவும் திட்டமிடப்பட்டதாகக் கூறப்பட்டது!

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட சட்டபூர்வமான ஒரு அரசாங்கத்தைப் பயங்கர வாதத்தின் மூலம் கவிழ்ப்பதற்கு இப்படியான சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்ட பயங்கரவாதிகளை முந்திய அரசாங்கம் சிறைக்குள் தள்ளியது.

ஆனுல், இன்று வடக்கே இங்கொன்றும் அங்கொன்றுமாக நிகழும் சிலவன்முறைச் சம்பவங்களுக்கு ''பயங்கரவாதம்'' என்று பெயர் சூட்டி, தமிழ் மக்களை அடக்கி யொடுக்குவதற்காக் ஆயுதப்படைகளின் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு இருக்கும் இன்றைய ஐ.தே.க. அரசு. பதவிக்குவந்ததும் என்ன செய்தது?

முந்திய அரசைக் கவிழ்ப்பதற்கு சட்டவிரோதமான வழிகளைப் பயன்படுத்தி—நாட்டில் பயங்கர வாதத்துக்கு வித்திட்ட பயங்கரவாதிகளை ''நல்ல பிள்ளைகள்'' என்று முதுகில் தட்டிக் கொடுத்து சிறையிலிருந்து அவர்களை நிபந்தனையற்று விடுதலை செய்தது!

முந்திய அரசாங்கம், பயங்கரவாதத்தைப் பயங்கரவாதத்தாலேயே அடக்கமுடியும் என்று கூறி அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்ட போது—ஐயையோ, அப்பாவிச் சிங்கள இளைஞர்களை அநியாயமாகக் கொல்கிருர்களே என்று சத்தமிட்டவர்கள் தாம், இன்று தமிழ் ஈழத்தில் ''பயங்கரவாதத்தை பயங்கரவாதத்தால் அடக்கமுடியும்'' என்று கூறிக்கொண்டு அப்பாவித் தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்துகிருர்கள்!

என்ருலும் அமைச்சர் சிறில்மத்தியூவுக்கு நன்றி கூறுவோம்! அவர்தான் தமிழனை எப்போதும் தட்டியெழுப்பி வைத்துக் கொண்டிருப்பவர்; சிந்திக்காத தமிழனையும் சிந்திக்க வைப்பவர்!


பயங்கர வாதத்தைப் பயங்கரவாதத்தால் தான் அடக்கமுடியும்என்றதமது 'பச்சை' உண்மையைக் கூறிய அவருக்குநன்றி கூறுவோம்!

—2-ம் பக்கத் தொடர்

குமாரசாமி, க. சிவசம்பு, சி. வீரசிங்கம் ஆகியோர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வல்வை சனசமூக சேவா நிலையத்திற்கு அண்மையிலுள்ள திருமதி மகாலக்ஷ்மி நடராஜா என்பவரது வீட்டு கண்ணுடி ஜன்னல்கள், கதவுகள் ஆகியனவும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

கடைகள், வீடுகளைத் தீக்கிரையாக்கி, அடித்து நொருக்கிய வெறிக்கூட்டத்தினர் வாசிகசாலையையும் விட்டுவைக்கவில்லை. வல்வை சனசமூக நிலையத்தினுள் புகுந்து அங்கு இருந்த கண்ணுடி விளம்பரப் பெட்டிகளோடு மட்டுமன்றிப் புதினப் பத்திரிகைகளிற்கூட தங்கள் வலிமையைக்காட்டியுள்ளனர்.



சங்கானை வாழ்மாதர்களின் மேம்பாட்டுக்காக உருவாகிய சங்கானை மாதர் முன்னேற்றச் சங்கத்தின் உறுப்பினராகவும், தலைமையாகவும் விளங்கி சமூக சேவையாற்றிய திருமதி கனகவல்லி பொன்னம்பலம் அவர்கள் அண்மையில் காலமானுர். இவரது மறைவு சங்கானை மக்களுக்கு ஓர் பேரிழப்பாகும். இவரது மறைவுக்கு சங்கானை த.வி.கூ. தமிழ்இளைஞர்பேரவை, மகளிர்பேரவை. ஆகியவை அஞ்சலிசெலுத்தியுள்ளன.

## தந்தை செல்வாவும் அறிஞர் அண்ணுவும் தாக்கப்பட்டனர்

தமிழ் ஈழத்தின் முன்னேடி தந்தை செல்வாவின் படத்தினையும், அறிஞர் அண்ணுவின் படத்தினையும் சிதைத்துச் சின்னுபின்னப் படுத்தியுள்ளனர். கென்னடி மகாத்மா காந்தி. ஜவகர்லால்நேரு, சுபாஸ்சந்திர போஸ் ஆகியோர்சிறீலங்கா வீரர்களின் சின்னத்தனத்திற்கு ஆளாகியுள்ளனர். அலுவலகஅறைக்குள் நுழைந்து கடிதக் கோவைகள், பதிவேடுகள்; தீந்தைவகைகள் போன்றவற்றையும் சட்டத்தின் காவலர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

## பஸ் வண்டியில் வந்தவர்களும் தாக்கப்பட்டனர்

763ம் இலக்கமுடைய கீரிமலை பஸ் அங்கிருந்து புறப்பட்டு பருத்தித்துறை நோக்கிவந்துகொண்டிருந்த சமயம் இராணுவ முகாமிற்குச் சமீபமாக வழிமறிக்கப்பட்டு அதில் வந்த பிரயாணிகளிம் படுமோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர். வல்வெட்டியைச் சேர்ந்த சின்னையா வீரசிங்கம் என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ளது. பெண்மணிகள் தலைமயிரில் பிடிக்கப்பட்டு தாஷணை வார்த்தைகளினுல் ஏசப்பட்டு படுமோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர். சில பஸ்கள் இடைவழியில் திரும்பிச் சென்றுள்ளன. யாழ். பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் இரவு பட வண்டி ரத்துச் செய்யப்பட்டது.

த. மகேந்திரன். த. பாஸ்கரன். வ. விசயரத்தினம் ஆகியோர் பொலிசாரினுலும்: மயில்வாகனம் பெரியதுரை என்பவர் இராணுவத்தினராலும் தாக்கப்பட்டுள்ளனர். மொத்தமாக சுமார் ஐம்பது பேர்வரையில் தாக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் கடமைபுரிகின்ற தே. கிருஷ்ணகுமார் என்ற ஊழியரை நோக்கி இரு தடவைகள் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுள்ளன. அவன் தனது புத்தி சாதுர்யத்தினுல் காயமெதுவும் இன்றி உயிர் தப்பியுள்ளார்.

கடைகள்னுள் இருந்தவர்களையும், தெருவில் நின்றவர்களையும் வாகனங்களில் ஏற்றிச்சென்ற இராணுவத்தினர் அவர்களை இராணுவ முகாமிற்குக் கொண்டு சென்று பல மைல்தூரத்தில் இறக்கி விட்டிருக்கின்ருர்கள்.

இவர்கள் வெறியாட்டம் நிகழ்த்திக் கொண்டிருந்த வேளையில் துணிச்சல் மிக்க இளைஞர்களின் நடவடிக்கைகளினுல் சட்டத்தரணி சண்முகசுந்தரம். சமாதான நீதவான் ஞானமூர்த்தி போன்ருேர் உதவி அரசாங்க அதிபரோடு தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கியதன் பேரில் அவர் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார், உதவி அரசாங்க அதிபர் பொலிஸ் அத்தியட்சகரோடு தொடர்பு கொண்டு நிலைமை மோசமடையா வண்ணம் பாதுகாத்துள்ளார். திருமதி துரைரத்தினம், திருமதி யோகேஸ்வரன் ஆகியோரும் கொழும்பிலுள்ள கூட்டணிப் பா. உ.க்களிடம் செய்தியை அறிவித்துள்ளனர்.



## சிறைக் குயிலின் வேதனை!

அன்புள்ள அம்மா, மலர், ஜெயம், சுதர்சன்,

நான் நல்ல சுகம். இங்குஉள்ளவர்கள் அனைவரும் நலம். மட்டக்களப்பில் புயலின்போது நடந்த பயங்கரக்கொடுமைபற்றி அறிந்து தாங்கொணுத் துயரம் அடைந்தோம். ஜெயம் அனுப்பிய கடிதம்மூலம் நீங்கள் ஓரளவு தப்பிப் பிழைத்ததை அறிந்து இறைவனுக்கு நன்றி செலுத்தினேன். மட்டக்களப்பு மக்கள் துன்பப்படும்போது அவர்கள் கூட இருந்து உதவி செய்யமுடியாமல்இங்கு அடைத்து வைக்கப்பட்டிருப்பதை நினைத்து பெருமூச்சு விடுவதைத் தவிர எனக்கு வேறுவழியில்லை. எல்லோருக்கும் இறைவன் ஆறுதல் வழங்குவானுக.

இங்ஙனம்'

காசி ஆனந்தன்.

★ தனது வீட்டாருக்கு கண்டிபோகம்பரைச் சிறையிலிருந்து கவிஞர் எழுதிய கடிதம்.


## பத்திரிகைச் செய்தி கட்டுக் கதை

இவ் வெறியாட்டங்கள் சம்பந்தமாக ஈழ நாட்டில் வெளியாகிய பொலிஸ் நிலைய முற்றுகை செய்தியில் எதுவித உண்மையும் இருக்கவில்லை. பொலிசார் யாரையும் கைது செய்யவுமில்லை — பொதுமக்கள் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிடவுமில்லை--மின்சாரம் தடைப்படவுமில்லை.

செவ்வாயன்று மாலை சம்பவங்களைக் கேள்வியுற்ற தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் வ.ந. நவரெத்தினம்; சி. கதிரவேற்பிள்ளை, திருநாவுக்கரசு ஆகியோர் வல்வைக்கு விஜயம் செய்து இடங்களைப் பார்வையிட்டதோடு அரசாங்க அதிபரோடு தொடர்பு கொண்டு ஆவன செய்வதாகக் கூறிச் சென்றுள்ளனர்.

நாளும் பொழுதும் பொலிஸ், இராணுவத்தினரின் காட்டுமிராண்டித்தனங்கள் அதிகரித்க்கொண்டு செல்லும் பட்சத்தில் தமிழ்ப்பகுதிகளில் பயங்கரமான விளைவுகள் கடந்து விடுமோ என அப்பாவிப் பொதுமக்கள் அஞ்சுகின்ருர்கள்.

— சுதந்திரன் ஒற்றன்



வடமாநிலத்தில் சாரணர் விழாவின்போது மில்க்வைற் தொழிலதிபர் மரம் நாட்டும்பணி பற்றிப்பேசிய பின் மாங்கன்று நாட்டுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைப்பிரிப்பதே பயங்கரவாதிகளின்நோக்கம்!

## ‘புலி’களுக்குஎதிராகச் சாட்சியமளிக்க எவரும் முன் வருகிறார்களில்லையே!”

### பாராளுமன்றத்தில் பிரதமர் பிரேமதாசா கவலை!

19-12-78 செவ்வாய்க்கிழமை இரவு சிறீலங்காப் பாராளுமன்றத்தில் தமிழீழத்தில் சிறீலங்காப் படைகள் மேற்கொண்டு வரும்பயங்கரவாத நடவடிக்கைகளை அம்பலப்படுத்தியும், அவற்றை நிறுத்த நடவடிக்கையெடுக்குமாறு கோரியும் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் ஒத்திவைப்புப் பிரேரணையின்போது பேசியதற்கு சிறீலங்காவின் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பதிலளித்துப் பேசுகையில் கூறியதாவது:—

‘‘இங்கு எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு விடையளிப்பதற்கு முன்னர், வடமாகாணத்தில் நிலவும்எந்தமாதிரியான சூழ்நிலையில் ஆயுதப் படைகள் அங்கே தமது கடமையை ஆற்றவேண்டியுள்ளது. என்கிற பின்னணியை இச்சபைக்கும் நாட்டுக்கும் அறிவிக்கவிரும்புகிறேன்.

வடமாகாணத்தில் விடுதலை இயக்கம் என்று அழைக்கப்படும் இயக்கம் அமைக்கப்பட்டபின்பு, அரசின் மேலாதிக்கத்தையும் இறைமையையும் அழிப்பதற்கு அங்கு தீவிர இயக்கம் நடைபெற்றுவந்திருக்கிறது. தீவின் எந்தப்பகுதியிலும், அரசின் இறைமையைக்காப்பாற்றும் பொறுப்புள்ள அரசாங்க அமைப்பு ஆயுதப் படைகளும், பொலிசுமேயாகும்.

சிறீலங்காவின் ஒருமைப்பாட்டையும், இறைமையையும் உடைத்தெறிந்து, நாட்டின் ஒருபகுதியை விடுதலை செய்யப்போவதாக உறுதியேற்றிருக்கும் சில குறிப்பிட்ட தீவிரவாத இளைஞர்களுக்கு வடமாகாணத்தில் பொலிசாரைத் தாக்குவதே குறியாக இருந்து வந்திருக்கிறது. இந்தத் தீவிரவாத இளைஞர்களால்தான், தமிழர் விடுதலைக்கூட்டணியும் ஒரு தனிநாடு அமைக்கும் நோக்கத்துடன் ஈழம் என்ற கொள்கையை ஏற்கவேண்டிய நிர்ப்பந்தம் அதற்கு ஏற்பட்டது என்பது ஒரு பொதுவான அபிப்பிராயமாகும்.

இது இறுதியாக பாதுகாப்பு நடவடிக்கைகளில் முன்னணியில் நின்று சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுடன் குறிப்பாக பொலிசாருடன்மோதுதலைத் தோற்றுவித்துள்ளது.

பொலிஸ் சேவையின் நல்ல பெயருக்கும் செல்வாக்குக்கும் அவமதிப்பை உண்டாக்கி அச்சேவையை அழித்துவிட ஒரு திட்டமிட்ட பிரசாரம் இதே சக்திகளால் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக இதுவரை 11பொலிசார் காட்டுமிராண்டித்தனமாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பொலீஸ்காரர்களின் ஒவ்வொரு கொலையும்-கண்ணுற்கண்ட சாட்சிகள், எவரும் எவ்விதமான சாட்சியமும் அளிக்க முன்வரத் தயங்குவதால்-கண்டுபிடிக்கப்படாமலே உள்ளது

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் அரசுக்கு உதவிபுரிந்த தமிழ் பொலிசார்மீதும் தாக்குதல் நடைபெற்றிருக்கின்றன.

இதன்பின்னர், புலி இயக்கம் என்று சொல்லப்படும் இயக்கமும் வட மாகாணத்தில் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியது. சந்தேகமின்றி அது ஒரு பயங்கரவாத இயக்கமேதான். இந்த இயக்கம் இப்போது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களில் பயிற்சி பெற்றுவிட்டது.

இந்தப் புலி இயக்கத்தின் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட எந்த ஒரு வழக்கிலும் எந்த ஒரு பிரஜையும் சாட்சியமளிக்க முன்வரமாட்டார் என்ற நிலைமையே வடமாகாணத்தில் இன்று நிலவுகிறது.

புலிஇயக்கமும், பயங்கரவாதிகளும்சம்பந்தப்படாத கொள்ளை, வழிப்பறி போன்ற ஏனைய எல்லா வழக்குகளிலும், சாட்சிகள் சாட்சிசொல்ல முன்வருகிறார்கள் என்பதை அறியும்போது இச்சபைக்கு ஆச்சரியம்ஏற்படும்.

இந்தப்பயங்கரவாதஇயக்கத்துக்கு விரோதமான தமிழர்கள் எல்லோரும் துரோகிகளாகக் கருதப்படுகின்றனர். முன்னைய அரசின் காலத்தில் திரு. துரையப்பா படுகொலை செய்யப்பட்டதும், வட்டுக்கோட்டை முன்னாள் பா. உ. திரு. ஆ. தியாகராசா, நல்லூர் முன்னாள் பா. உ. திரு. அருளம்பலம் ஆகியோரைக் கொல்ல நடைபெற்றமுயற்சியும் இதற்கு உதாரணங்கள். அண்மையில் திரு. கனகரத்தினத்தை கொல்ல முயற்சி நடந்தது.

வடமாகாணத்தில் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள் இந்தச் சூழ்நிலையிலேதான் அங்குசெயற்படவேண்டியுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற நல்லூர் வங்கிக்கொள்ளை, பொலீஸ் கொலைகளின் பின்பு, ஆயுதப்படைகளினதும் பொலிசாரினதும் மனதில் மட்டுமன்றி சட்டத்துக்குப் பணிந்துவாழும் வடபகுதிப்பிரஜைகளின் மனதிலும் பாதுகாப்பற்ற ஓர் உணர்வு நிலவுகிறது.

எனவே, துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதில் நிறைந்த பயிற்சியும், அதிலே தனித்திறமையும் உள்ளவர்கள் போலக் காணப்படும் பயங்கரவாதிகளின் எந்த ஒரு கொடூரச் செயலுக்கும் எதிராக எதிர் விளைவு நிகழ்வது ஆச்சரியப்படத்தக்கதல்ல.

தமக்கு எதிராக யாரும் சாட்சியம் சொல்ல முன்வரமாட்டார்கள் என்பது பயங்கரவாதிகளுக்கு நன்கு தெரியுமாகையால் பட்டப்பகலில் கொலைசெய்யவும் அவர்கள் துணிந்துவிட்டார்கள். தற்போது இருக்கும் சூழ்நிலையில் சட்டத்துக்கு அமைந்து வாழும் வடமாகாணப் பிரஜைகள்உதவியின்றி இருக்கிறார்கள். வன்முறையால் சாகடிக்கப்படுவோம் என்ற அச்சத்தின் காரணமாகவே அவர்கள் எவரும் எந்தத் தகவலும்தரத் தயங்குகிறார்கள்.

இம்மாதிரியான உணர்ச்சியூட்டப்பட்ட சூழ்நிலையில், மனிதர்களான பொலிசாரும் ஆயுதப்படையினரும் வேலைசெய்யும்போது, சில சந்தேகநபர்கள்மீது பழிவாங்கமுயற்சித்தலும் [illegible] படியிருந்தபோதிலும் நாம் [illegible]

பயங்கரவாத இயக்கம் அரசாங்கச் சொத்துக்களின் மீது தாக்குதல் நடத்துவதையும், அரசாங்கப்பணத்தைக் கொள்ளையடிப்பதையுமே குறியாகவைத்திருப்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். இது ஒரு தேச விரோதச் செயலாகும். இச்செயல்கள் வடமாகாணத்தில் அரசாங்க நிர்வாகத்தை சீர்குலைக்கும் நோக்குடனேயே ஏவிவிடப்படுகின்றன.

உலகின் கண்களில் சிறீலங்காவையும், அரசாங்கத்தையும் சிறுமைப்படுத்துவதற்காக வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் ப்பிரசார இயக்கம் குறிப்பிடத்தக்க அளவு முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டது. தனிநாடு அமைக்கும் பிரசாரத்தை மேற்கு நாடுகளில் நடத்துவதற்காக நிதி திரட்டப்படுகிறது. சிறீலங்காவிலுள்ள தமிழ்பேசும் மக்களின் நிலை குறித்துஅந்த நாடுகளில் . பொய்ப்பிரசாரம் நடத்தப்பட்டு, அந்த நாட்டு அதிகாரிகளை தவறானவழியில் இட்டுச்செல்ல முயற்சிகள் நடைபெற்றுள்ளன.

—இவ்வாறு திரு. பிரேமதாசா பேசினார்.

## உடன் நடடிக்,..

1-ம் பக்கத் தொடர்

தெரிவித்துள்ள புகாரில் கொழும்புக்கு மீன் ஏற்றிச் சென்ற தமது லொறிச் சாரதியும் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர். இதுபோல பல சாரதிகள் தாக்கப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளது.

‘‘இதன் எதிரொலியாக லொறிகளில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு மீன் மற்றும் பொருட்களை எடுத்துச்செல்லச் சாரதிகள் இப்பொழுது மறுப்புத்தெரிவிக்கின்றனர்.

‘‘இவை சம்பந்தமாக உடனடியாக; பலன்தரக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

‘‘தமிழ் மக்கள்மீதுபொலிஸாரும், இராணுவத்தினரும் நடத்தும் தாக்குதல்களை உன்னிப்பாகக் கவனிக்கும் பொழுது 1977ஆகஸ்ட் கலவரம் நினைவுக்கு வருகிறது. இப்படியான தொரு கலவரம் மீண்டும் உருவாகுவதற்குத் தூபமிடப்படுகிறதோ என்றுமக்கள் அஞ்சுகின்றனர். ஆகவே இவ் விஷயத்தில் உரிய நேரத்தில் சரியான நடவடிக்கையைத் தாமதமின்றி எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தவறும் பட்சத்தில் அல்லது தாமதம் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் பயங்கர விளைவுகள் ஏற்படலாமென்று அஞ்சுகின்றேன்.

## பனியால் விழுந்.

—1-ம் பக்கத் தொடர்

ளுக்கு தமிழன் என்றால்— அவன் யாழ்ப்பாணத்தானும் ஒன்றுதான்; மட்டக்களப்பானும் ஒன்றுதான்; மலைநாட்டானும் ஒன்றுதான் என்பதை நாம் அறிவோம்—

இதை உறுதி செய்வது போலவடக்கிலே குவிக்கப்பட்டுள்ள ஆயுதப்படைகள்; யாழ்ப்பாணத்திலும், வசாவிளானிலும், வல்வெட்டித்துறையிலும் தமிழனைத்தாக்கியஅதேசமயம்— அடிமைத் தமிழர்களைத் தாக்குவதில் எமக்கும்பங்கில்லையா என்று கூறிக்கொண்டு, மட்டக்களப்பிலும் இராணுவத்தினர் அப்பாவித் தமிழ் மக்களைத் தாக்கியுள்ளனர்.

அதுவும் கொடிய சூறாவளியினால் ஏற்பட்ட துன்பத்திலிருந்து மட்டக்களப்பு மக்கள் விடுபடுவதற்கு முன்பே நீதியமைச்சர் திரு. தேவநாயகத்தின் இராணுவம், மட்டக்களப்பு தவறணையொன்றில் ஓசியில் குடிப்பதற்கு சென்று, தவறணையையும் அடித்து நொருக்கி மட்டக்களப்பு பொது மக்களையும் தாக்கியுள்ளது.

வெறிபிடித்த சிங்களவனின் கண்களுக்கு தமிழன் அடிமையே—அவன் அமைச்சனாக இருந்தாலும் சரி, ஆண்டியாக இருந்தாலும் சரி—மட்டக்களப்பில்வாழ்ந்தாலும் சரி, யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தாலும் சரி— இதை தேவநாயகம் எப்போதுதான் உணர்வாரோ?

பனியால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல, சூறாவளியால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கும் மட்டக்களப்பு மக்களுக்குச் சேவை செய்வதற்காக அழைக்கப்பட்ட இராணுவம், மக்களைத் துன்புறுத்தத் தொடங்கியுள்ளது. ஜனாதிபதி இது குறித்துகடும் நடவடிக்கை யெடுப்பாரா என்று கேட்கின்றனர் மட்டக்களப்பு மக்கள்.

## ‘பயங்கரவாத’த்துக்கு கடாபி தந்த விளக்கம்!

தமிழ் ஈழத்தில் ஆங்காங்கே ஒரு சில இடங்களில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு ‘‘பயங்கரவாதம்’’ என்று பெயர் சூட்டி, அப்பயங்கரவாதத்தை நசுக்குவதற்கு என்ற போர்வையில் தமிழின விடுதலைப் போராட்டத்தை அடக்குவதற்கு தனது ஆயுதப்படைகளை சிறீலங்கா அரசு தமிழ் ஈழத்தில் குவித்துள்ளது.

சிறீலங்காவின் ஆயுதப்படைகள் விடுதலை கோரும் தமிழ் ஈழமக்களின் மீது திட்டமிட்ட பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு வருகின்றன.

பயங்கரவாதத்தைப் பயங்கரவாதத்தின் மூலமே முறியடிக்க முடியும் என்று சிறீலங்கா அமைச்சரான சிறில் மத்தியூ சிறீலங்காப் பாராளுமன்றத்தில் முழங்கியிருக்கிறார்.

சிறீலங்காவின் இறைமையையும், சுயாதிபத்தியத்தையும் அழித்து, நாட்டைப் பிரிக்க உறுதியெடுத்திருக்கும் சில தீவிரவாத சக்திகளே இவ்வாறு பயங்கரவாதத்திலீடுபட்டிருப்பதாக சிறீலங்காவின் பிரதமர் திரு. பிரேமதாசா பாராளுமன்றத்தில் கூறியிருக்கிறார்.

இச்சமயத்தில் சிறீலங்கா தலைமை தாங்கும் மூன்றாவது அகிலமான கூட்டுச்சேரா நாடுகளில் ஒன்றாக விளங்கும் லிபியா நாட்டின் ஜனாதிபதி கேணல் கடாபி 1976ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற கூட்டுச்சேரா மாநாட்டுக்கு வந்திருந்தபோது, ‘பயங்கரவாதம்’ பற்றித் தமது கருத்தைப் பின்வருமாறு கூறியிருந்ததும் இச்சமயத்தல் நினைவு கூரத்தக்கது.

அவர் பின்வருமாறு கூறியிருந்தார்—

‘‘தங்கள் இழந்த நாட்டை மீட்பதற்காக விமானக் கடத்தலில் ஈடுபடுபவர்கள் பயங்கரவாதிகள் அல்லர்; அவர்கள் நாட்டுப்பற்றுமிக்க வீரர்கள்; அவர்களை நாம் கௌரவிக்கிறோம். தமது சொந்த வழியிற் செல்ல ஒவ்வொரு நாட்டுக்கும் சகல உரிமையும் உண்டு. ஒரு நாட்டின் இந்த அபி அபிலாஷைக்கு எதிரான எந்த ஒரு ஆட்சேபனையும் அப்பட்டமான ஆக்கிரமிப்பேயாகும். தமது நியாயமான உரிமைகளை அடைய பயங்காவாத முறைகளைக் கையாளும் எந்த ஒரு நாட்டுக்கும் லிபியா ஆதரவளிக்கும். நாங்கள் விடுதலை இயக்கங்களை ஆதரிப்போம்; விடுதலை கோருவது பயங்கரவாதமானால், பயங்கரவாதத்தையும் ஆதரிப்போம்!’

தமிழ் ஈழ மக்கள் தமது இழந்த அரசுரிமையை மீட்பதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையில் அறவழியிலேயே தமது விடுதலைப் போராட்டத்தை நடத்துவதற்கு உறுதிபூண்டுள்ளனர். ஆனால் இந்த அறவழிப் போராட்டத்துக்கு ‘பயங்கரவாதம்’ என்று பெயர் சூட்டப்படுமானால்—கேணல் கடாபியின் மேற்கண்ட உறுதியான வார்த்தைகளையே ஆட்சியாளருக்கு நினைவூட்டுகிறோம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org